# ஒப்பந்தங்கள்

## சர்வதேச ஒப்பந்தங்கள்:

| வ.எண் | ஒப்பந்தம் | துறை | நாட்டின் விவரங்கள் |
|---|---|---|---|
| 1 | இந்தியா - ஜப்பான் | அஞ்சல் துறை , சுற்றுச்சூழல் ஒத்துழைப்பு துறை , சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்துறையில் இந்தியா - ஜப்பான் இடையே ஒத்துழைப்புக்கான ஒப்பந்தத்திற்கு - மத்திய அமைச்சரவை ஒப்புதல் | பிரதமர் - சின்சோ அபே<br>மாமன்னர் - ஆக்கிகிட்டோ<br>தலைநகரம் - டோக்கியோ<br>நாணயம் - யென் |
| 2 | இந்தியா - அமெரிக்கா | புவி அறிவியல் துறையில் அறிவியல் மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்பு தொடர்பாக இந்தியா - அமெரிக்கா இடையேயான ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல். | ஜனாதிபதி - டொனால்ட் ட்ரம்ப்<br>துணை ஜனாதிபதி - மைக் பென்ஸ்<br>தலைநகரம் - வாஷிங்டன், டி.சி.<br>நாணயம் - அமெரிக்க டாலர் |
| 3 | இந்தியா - ரஷ்யா | மனிதர்களைக் கொண்ட விண்வெளிப்பயணத் திட்டத்தில் இந்தியா மற்றும் ரஷ்யா ,கூட்டு நடவடிக்கைகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல். | பிரதமர் - விளாதிமிர் பூட்டின்<br>ஜனாதிபதி-திமித்ரி மெட்வெடெவ்<br>தலைநகரம் - மாஸ்கோ<br>நாணயம் - ரூபிள் |
| 4 | இந்தியா - பிரான்ஸ் | இந்தியா - பிரான்ஸ் இடையே எரிசக்தி பாதுகாப்புத் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மத்திய அமைச்சரவை ஒப்புதல். | பிரதமர் - எடுவர்ட் ஃபிலிப்<br>ஜனாதிபதி - இம்மானுவேல் மாக்ரோன்<br>தலைநகரம் - பாரிஸ்<br>நாணயம் -யூரோ |
| 5 | இந்தியா - யுஏஇ | ஆபிரிக்காவில் வளர்ச்சிக்கான ஒத்துழைப்பிற்கு, நாணய மாற்றுவியலுக்காக இந்தியாவிற்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்க்கும் இடையே கையெழுத்தானது. | ஜனாதிபதி - கலீஃபா பின் ஸைத் அல் நஹியான்<br>பிரதம மந்திரி - முகம்மது பின் ரஷீத் அல் மக்தூம்<br>தலைநகரம்- அபுதாபி<br>நாணயம் - யூஏஈ திர்ஹம் |

| | | | |
|---|---|---|---|
| 6 | ADB மற்றும் இந்தியா | ஒடிசாவில் திறமை மேம்பாட்டு சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி 85 மில்லியன் டாலர்களுக்கான ஒப்பந்தம் கையெழுத்து. | தலைவர் - தாகிகோ நாகோ<br>உருவாக்கம் -19 டிசம்பர் 1966<br>தலைமையகம் - மானிலா, பிலிப்பைன்ஸ்<br>உறுப்பினர் -67 நாடுகள் |
| 7 | ADB மற்றும் இந்தியா | தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்தி வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கான 31 மில்லியன் டாலர் கடன் உதவிக்கான ஒப்பந்தத்தில் மத்திய அரசும் ஆசிய வளர்ச்சி வங்கியும் கையெழுத்திட்டுள்ளன. | தலைவர் - தாகிகோ நாகோ<br>உருவாக்கம் -19 டிசம்பர் 1966<br>தலைமையகம் - மானிலா, பிலிப்பைன்ஸ்<br>உறுப்பினர் -67 நாடுகள் |
| 8 | இந்தியா - சவுதி அரேபியா | 2019ஆம் ஆண்டு ஹஜ் ஒதுக்கீட்டை அதிகரிக்க சவுதி அரேபியாவிடம் இந்தியா கோரிக்கை. சிறுபான்மை விவகார அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி சவுதி அரேபியா ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சரிடம் இந்த வேண்டுகோளை விடுத்தார் . இரு தலைவர்களும் இருதரப்பு ஆண்டு ஹஜ் 2019 ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். | கிங் - சல்மான்<br>பிரின்ஸ் - முகம்மது<br>தலைநகரம் - ரியாத்<br>நாணயம் - சவுதி அரேபியா |
| 9 | இஸ்ரோ - ராஸ்காஸ் மோஸ் | இஸ்ரோ மற்றும் ராஸ்காஸ்மோஸ் 2018ம் ஆண்டு அக்டோபர் 5ஆம் தேதி 'மனிதர்களைக் கொண்ட விண்வெளிப்பயணத் திட்டத்தில் கூட்டு நடவடிக்கைக்காக ' ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. | பிரதமர் - விளாதிமிர் பூட்டின்<br>ஜனாதிபதி - திமித்ரி மெட்வெடெவ்<br>தலைநகரம் - மாஸ்கோ<br>நாணயம் - ரூபிள் |

### பிற ஒப்பந்தங்கள்:

| வ.எண் | ஒப்பந்தம் | துறை | நாட்டின் விவரங்கள் |
|---|---|---|---|
| 1 | இந்தியா - தஜிகிஸ்தான் | வளர்ச்சிக்காக விண்வெளித் தொழில்நுட்பத்தின் அமைதிப் பயன்பாட்டு ஒத்துழைப்புக்கு இந்தியா-தஜிகிஸ்தான் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை ஒப்புதல். | ஜனாதிபதி - ஈமோமாலி ரஹ்மான்<br>பிரதமர் - அப்துல்லா அரிபோவ்<br>தலைநகரம்- துஷன்பே<br>நாணயம் - சோமனி |
| 2 | இந்தியா - உஸ்பெகிஸ்தான் | அமைதிக்காக விண்வெளி ஆய்வு மற்றும் கண்டறிதல்களைப் பயன்படுத்துவதற்காக இந்தியா - உஸ்பெகிஸ்தான் இடையேயான ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை ஒப்புதல். | ஜனாதிபதி - ஷாவத் மிர்சியோவ்<br>பிரதமர் - அப்துல்லா அரிபோவ்<br>தலைநகரம் - தாஷ்கண்ட்<br>நாணயம் - உஸ்பெக் சாம் |
| 3 | இந்தியா -ஜிம்பாப்வே | புவியியல், சுரங்கம் மற்றும் தாது வளங்கள் துறையில் ஒத்துழைப்புக்கு இந்தியா-ஜிம்பாப்வே இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை | ஜனாதிபதி-எமர்சன் மானங்கவ<br>துணை ஜனாதிபதி - கான்ஸ்டன்டினோ சிவன்கா கும்போ மொஹதி<br>தலைநகரம் - ஹராரே<br>நாணயம் - அமெரிக்க டாலர் |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்புதல். | |
| 4 | இந்தியா மற்றும் மொரா க்கோ | விண்வெளியை அமைதிக்காக பயன்படுத்துவதற்கு இந்தியா-மொராக்கோ இடையேயான ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை ஒப்புதல். | ஜனாதிபதி - முகம்மது VI<br>பிரதமர் - சாதேடியன் ஒத்மணி<br>தலைநகரம் - ரபாட்<br>நாணயம் - மொராக்கோ டிரம்ஹாம் |
| 5 | இந்தியா-அல்ஜீரியா | விண்வெளி அறிவியல், தொழில்நுட்பங்கள், பயன்பாடுகள் துறையில் இந்தியா - அல்ஜீரியா இடையேயான ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை அனுமதி. | ஜனாதிபதி - அப்திலாஸிஸ் போடேபிளிகா<br>பிரதம மந்திரி - அகமது ஓயாஹியா<br>தலைநகரம் - அல்ஜியர்ஸ்<br>நாணயம் - தினார் |

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்

### கேரளாவுக்கு ரூ. 3048 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீட்டிற்கு மத்திய அரசு ஒப்புதல்

- கேரள மாநிலத்தில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக , கேரளாவுக்கு 3048 கோடி ரூபாய் கூடுதல் நிதி உதவி வழங்க மத்திய அரசு ஒப்புதல்.

### 2023-ஐ சர்வதேச சிறுதானியங்கள் வருடமாக அனுசரிக்க FAO கவுன்சில் ஒப்புதல்

- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு , FAO கவுன்சில் 2023-ஐ சர்வதேச சிறுதானியங்கள் வருடமாக அனுசரிக்க ஒப்புதல் அளித்துள்ளது.

**வேளாண் ஏற்றுமதிக்கொள்கை 2018-க்கு அமைச்சரவை ஒப்புதல்**

- வேளாண் ஏற்றுமதிக்கொள்கை 2018-க்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- வேளாண் துறையில் உலக சக்தியாக இந்தியாவை உருவாக்குதல், விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல் பொருத்தமான கொள்கை திட்டங்கள் மூலம் இந்திய வேளாண் வளங்கள் ஏற்றுமதியை ஊக்கப்படுத்துதல் ஆகியவை இந்தக் கொள்கையின் தொலைநோக்குப் பார்வையாகும்.

**கப்பல் போக்குவரத்து அமைச்சகம் வாரணாசியில் சரக்கு[freight] கிராமத்தை மேம்படுத்த ஒப்புதல்**

- கங்கை ஆற்றின் குறுக்கே உள்ள நீர்வழி முனையத்திற்கு அருகிலுள்ள வாரணாசியில் உள்ள சரக்கு கிராமத்தை மேம்படுத்த கப்பல் போக்குவரத்து அமைச்சகம் அனுமதித்துள்ளது. இது 156 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

**பஞ்சாபில் ஷாபுர்கண்டி அணை திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல்**

- நதி நீர் வீணாவதை குறைப்பதற்கான முயற்சியாக, ராவி நதி பஞ்சாப் பகுதியில் ஷாபுர்கண்டி அணை திட்டத்தை செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

**கற்பழிப்பு, பாலியல் தாக்குதலுக்கு உள்ளானவர்கள் அடையாளங்களை வெளியிட உச்ச நீதிமன்றம் தடை**

- கற்பழிப்பு மற்றும் பாலியல் தாக்குதல் உள்ளானவர்களின் பெயர்கள் மற்றும் அடையாளங்களை வெளிப்படுத்தக்கூடாது என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

**அணை பாதுகாப்பு சட்டம், 2018**

- அணை பாதுகாப்பு சட்டம் , 2018 மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது . அணையின் நீர்த்தேக்கம் தொடர்பான பேரழிவுகள் தடுப்புக்காக கண்காணிப்பு, ஆய்வு, நடவடிக்கை மற்றும் குறிப்பிட்ட அணைகள் பராமரிப்பு ஆகியவற்றை இந்த மசோதா வழங்குகிறது.

**683 தனியார் FM ரேடியோ சேனல்களின் ஏலம்**

- 236 நகரங்களில்,தொலைவில் உள்ள சில இடங்களில் 686 தனியார் FM ரேடியோ சேனல்களுக்கு ஏலத்தில் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) மற்றும் இந்தியா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்**

- ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) மற்றும் இந்திய அரசாங்கம் புதுடில்லியில் $60 மில்லியன் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது . பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே வெள்ளம் விளைவிக்கும் பகுதிகளில் வெள்ளப் பாதுகாப்பு வேலைகள், வெள்ளப்பெருக்கங்களின் புனரமைப்பு மற்றும் சமூக அடிப்படையிலான வெள்ள அபாயம் மேலாண்மை நடவடிக்கைகள் ஆகியவற்றை தொடரவும் இந்த ஒப்பந்தம் கையெழுத்து.

**ரயில்வே அமைச்சகம் சுமை வீதத்தில் 25 சதவீத தள்ளுபடி செய்ய முடிவு**

- ரயில்வே அமைச்சகம் வெற்றுக் கன்டெய்னர்கள் மற்றும் வெற்று பிளாட் வேகன்கள் ஆகியவற்றின் போக்குவரத்திற்கு 25 சதவீத தள்ளுபடிகளை வழங்க முடிவு செய்துள்ளது.

**முஸ்லிம் மகளிர் (திருமண உரிமைகள் பாதுகாப்பு) சட்ட மசோதா மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது**

- முஸ்லீம் பெண்கள் (திருமண உரிமை உரிமைகள் பாதுகாப்பு ) சட்ட மசோதா மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## மக்களவையில் திருநங்கை மசோதா நிறைவேற்றப்பட்டது

- எதிர்க்கட்சிகளின் திருத்தங்களை நிராகரித்த பின்னர் மக்களவையில்திருநங்கை மசோதா (உரிமைகள் பாதுகாப்பு ) நிறைவேற்றப்பட்டது. கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம் போன்ற துறைகளில் ஒரு திருநங்கைக்கு எதிராக பாகுபாட்டை தடை செய்வதே இந்த மசோதாவின் நோக்கம் ஆகும் . மத்திய மற்றும் மாநில அரசுகள் அவர்களுக்கு நலன் அளிக்கும் திட்டங்களை வழங்கவும் இது வழிவகுக்கிறது.

## மாருதி சுஸுகி இந்தியா லிமிடெட் உடன் MoRD ஒப்பந்ததில் கையெழுத்து

- தீன் தயால் உபாத்யாயா கிராமீன் கௌசல்யா யோஜனா (டி.டி.யு.-ஜி.கே.ஓ) என்பது கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் (MoRD) தலைமை செயல்திட்டம் ஆகும் .
- மாருதி சுஸுகி இந்தியா லிமிடெட் மற்றும் கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் கிராமப்புற இளைஞர்களுக்கு திறமை வளர்ச்சிக்கான பயிற்சி அளித்தல் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அமைச்சர் ஸ்ரீ . நரேந்திர சிங் தோமர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

## வாடகைத் தாய் சட்ட வரைவு மசோதா நிறைவேறியது

- 2016 ஆம் ஆண்டுக்கான வாடகைத் தாய் சட்ட வரைவு மசோதாவை மக்களவையில் நிறைவேற்றப்பட்டது . இது வணிக ரீதியான வாட்கைத்தாய் மற்றும் அது தொடர்பான நியாயமற்ற நடைமுறைகளை தடை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது . இது குழந்தை கருத்தரிக்க முடியாத தம்பதியருக்கு மட்டுமே இந்த வாடகைத் தாய் சட்டம் பொருந்தும்.

## நுகர்வோர் பாதுகாப்பு மசோதா மக்களவையில் நிறைவேற்றம்

- நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் , 1986க்கு பதிலாக, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் , 2018 மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான நுகர்வோர் பிரச்சினைகள் குறைப்பு கமிஷனை நிறுவ முற்படுகிறது.

**டெல்லி சட்டசபை தீர்மானம் நிறைவேற்றம்**

- 1984 ஆம் ஆண்டு சீக்கியர் கலவரம் தொடர்பாக முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு வழங்கிய பாரத ரத்னா விருதை திரும்பப்பெறக்கோரி டெல்லி சட்டசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

**போக்சோ சட்டத்தில் திருத்தம் செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்கு மிகக் கடுமையான தண்டனை அளிக்கும் வகையில் , பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் (போக்சோ) சட்டம் 2012-ல் திருத்தம் செய்ய பிரதமர் திரு .நரேந்திர மோடி தலைமையில் கூடிய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**மத்திய பொதுத்துறை நிறுவனங்களை பங்குப் பரிவர்த்தனைபட்டியலில் இணைக்க அமைச்சரவை ஒப்புதல்**

- ஏழு மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் தொடக்க நிலை விற்பனை (ஐ.பி.ஓ)/தொடர்ந்தநிலை விற்பனை (எ்.ப்.பி.ஓ) மூலம் பங்குப் பரிவர்த்தனை பட்டியலில் சேருவதற்கு பிரதமர் திரு . நரேந்திர மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல்அளித்தது.

**தேசிய ஹோமியோபதி ஆணைய வரைவு மசோதா 2018**

- தேசிய ஹோமியோபதி ஆணையம் 2018-க்கான வரைவு மசோதாவிற்கு பிரதமர் திரு . நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

**2018 இந்திய முறை மருத்துவ மசோதாவுக்கான தேசிய ஆணையத்தை அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- 2018 இந்திய முறை மருத்துவ தேசிய ஆணையத்தை அமைப்பதற்கான வரைவு மசோதாவுக்கு பிரதமர் திரு . நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது

**கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2018**

- கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2018-க்கு புதுதில்லியில் பிரதமர் திரு .நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது . இந்த அறிவிக்கை கடந்த 2011 ஆம் ஆண்டு மறு ஆய்வு செய்யப்பட்டு அவ்வப்போது தி ருத்தங்கள் செய்யப்பட்டு வந்தது. கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது.

**விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் விண்வெளித் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் ககன்யான் விண்வெளித் திட்டத்திற்கு புதுதில்லியில் பிரதமர் திரு . நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தப் பயணம் அதிகபட்சமாக 7 நாட்கள் இருக்கும். மூன்று விண்வெளி வீரர்களை விண்வெளிக்கு தாங்கிச் செல்லும் வகையில் அமைக்கப்படும் விண்கலத்தை ஜிஎஸ்எல்வி மார்க் - 3 ராக்கெட் விண்ணில் செலுத்தும்.

**விளையாட்டு அமைச்சகம் டாப்ஸ்[TOPS] திட்டத்தின் கீழ் விளையாட்டுவீரர்களுக்கு வ ழங்க 100 கோடி நிதி ஒதுக்கீடு**

- டோக்கியோவில் 2020ல் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டியை முன்னிட்டு , ஒலிம்பிக் போடியம் திட்டத்தின் கீழ் , விளையாட்டு வீரர்கள் ரூ .100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, விளையாட்டுத்துறை ஆணையத்தின் இயக்குனர் நீலம் கபூர் தெரிவித்தார்.

[நடப்பு நிகழ்வுகள் 2018 PDF Download]

[பொது அறிவு பாடக்குறிப்புகள் PDF Download]

[பாடம் வாரியான குறிப்புகள் PDF Download]

**Whatsapp** குரூப்பில் சேர - [கிளிக் செய்யவும்]

**Telegram Channel** ல் சேர - [கிளிக் செய்யவும்]